
# மனிதகுலத்தை ஒருங்கிணைக்கும்

# ரமளான்



# என்றும் மாறாப் பொலிவோடு ரமலான்...!



இதோ மீண்டும் கடந்து செல்கிறது இன்னுமோர் ரமலான் மாதம்! இவ்வுலகில் இறைவனை நம்புவோருக்கு இது ஆன்மீக வசந்த காலம்! உள்ளங்களில் குதூகலமூட்டி அவர்களின் நம்பிக்கைக்குப் புத்துணர்வூட்டிச் செல்கிறது இந்த இனிய மாதம்!

உலக மக்கள் தொகையில் கால்வாசிக்கும் மேற்பட்டோர் இம்மாதம் முழுக்க பகலில் உண்ணா நோன்பு இருந்து புலன்களைக் கட்டுப்படுத்தி கொண்டு கழிப்பதை அறிவீர்கள். அத்துடன் தொழுகை, தானதர்மங்கள் இவற்றை கூடுதல் சிரத்தையுடன் அவர்கள் நிறைவேற்றுவதையும் காண்கிறீர்கள்.



எவ்வளவுதான் துயரங்களிலும் துன்பங் களிலும் மக்கள் ஆழ்ந்திருந்தாலும் அவர்களின் இறைநம்பிக்கையைப் புதுப்பிக்கும் பணியில் அது தவறுவதில்லை! குடிசைவாசிகள் ஆனாலும் குபெந்திரர்கள் ஆனாலும் அவர்கள் அனைவரையும் பரஸ்பரம் சந்திக்க வைக்கிறது ரமலான்! அதன் காரணமாக இறைவனைப்பற்றியும் இவ்வுலகின் அழியும் தன்மை பற்றியும் மறுமை வாழ்வு பற்றியும் சிந்திக்க வைத்து மனிதனை சமநிலைப் படுத்துகிறது இந்த புனித ரமலான்!

இந்த ரமலான் மாதத்திற்கு ஏனிந்த சிறப்பு?
அதை அறியவேண்டாமா?



ஏக இறைவனின் திருப்பெயரால்....

# மனிதகுலத்தை ஒருங்கிணைக்கும் ரமலான்!

ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்ற கருத்தில் உடன்பாடு இல்லாதவர்கள் மிக அபூர்வமே. ஆனால் ஆளுக்கு ஆள், இனத்துக்கு இனம், இடத்துக்கு இடம், நிறத்துக்கு நிறம், மொழிக்கு மொழி வேறுபாடுகளும் வேற்றுமை உணர்வுகளும் கொண்ட மனிதகுலத்தை ஒருங்கிணைக்க ஒரு வழி இருக்குமானால் அது இன்று உலகம் சந்தித்துக் கொண்டிருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதாக இருக்கும். அவ்வழி தனிநபர் ஒழுக்கத்தையும் சமூக ஒற்றுமைக்கான அடிப்படைகளையும் மேம்படுத்துவதாக அமையவேண்டும்.

இஸ்லாம் என்ற சீர்திருத்த இயக்கம் அதில் இணைந்தவர்களுக்கு விதிக்கும் ஒவ்வொரு கடமைகளிலும் இந்த மனிதகுல ஒருங்கிணைப்பிற்கு முன்னுரிமை அளிப்பதை ஆராய்வோர் அறியலாம். இஸ்லாத்தின் முக்கிய கடமையான ஐவேளைத் தொழுகை மக்களை வேளாவேளைக்கு ஒன்று கூட்டுவதையும் தீண்டாமை ஜாதிக்கொடுமை போன்ற சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காண்பதையும் அறிவீர்கள். அதைப் போலவே ஒவ்வொரு ரமலான் மாதம் வரும்போதும் நோன்பு என்ற கடமை மனித குலத்தை ஒருங்கிணைக்கும் பணியைத் தவறாது செய்கிறது.

● ”ஜமாஅத்துடன் கூட்டாகத் தொழுவது தனித்துத் தொழுவதைவிட 27 பங்கு பதவியால் கூடுதலாகும்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (இப்னு உமர்(ரழி), புகாரீ, முஸ்லிம்)

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ”யார் ஒரு நோன்பாளிக்கு நோன்பு திறக்க ஏற்பாடு செய்கிறாரோ அவருக்கு நோன்பு திறப்பவரின் கூலி கிடைக்கிறது. இதன் மூலம் நோன்பாளியின் கூலியில் எந்தவித குறையும் ஏற்படுவதில்லை”. (ஆதாரம்:அஹ்மத்)

இந்த நபிமொழிகள் ஐவேளைத் தொழுகைகளை கூட்டாகத் தொழுவதையும் சக நோன்பாளி நோன்பு திறப்பதற்காக உணவளிப்பதையும் வலியுறுத்துவதால் ரமலான் மாதத்தில் அதிகம் நன்மைகளையும் இறைப் பொருத்தத்தையும் நாடி விசுவாசிகள் இவற்றில் கூடுதல் ஊக்கத்தோடு ஈடுபடுவதை நீங்கள் காணலாம்.

● உலகெங்கும் உள்ள பள்ளிவாசல்களில் ஐவேளைத் தொழுகை நேரங்களில் இறைவிசுவாசிகள் இன, நிற, மொழி மற்றும் பொருளாதார ஏற்ற தாழ்வுகள் மறந்து தொழுகைக்காக வரிசைகளில் அணிவகுப்பதும்...

● கடுங்குளிரிலும் அதிகாலை வேளைக்கு முன்னதாகவே எழுந்து உணவருந்திவிட்டு சூரியன் உதிக்கும் முன்னரே அதேபோல் தொழுகைகளில் அணிவகுப்பதும்...

● மாலை சூரியன் அஸ்தமிக்கும் முன்னரே பள்ளிவாசல்களில் ஒன்று கூடி அவரவர் கொண்டுவந்த உணவுப்பொருட்களையும் பழங்களையும் ஓரிடத்தில் குவித்து, பள்ளிவாசல்களில் காய்ச்சப்படும் நோன்புக்கஞ்சியுடன் சேர்த்துப் பரிமாறப்பட நீண்ட சமபந்திகளில் அமர்ந்து சக விசுவாசிகளோடு பகிர்ந்துண்பதற்காக காத்திருப்பதும்...

● சூரியன் மறைந்த உடன் இறைவனை நினைவு கூர்ந்து பிரார்த்தனைகள்

கூறப்பட ஒரே நேரத்தில் சகவிசுவாசிகளோடு பேரீத்தம்பழம் கொண்டு நோன்பைத் திறப்பதும்...

● உணவுண்ட பின் மீண்டும் மாலைத் தொழுகைக்காக அணிவகுப்பதும் அதைத் தொடர்ந்து இரவுத் தொழுகைக்காக அணிவகுப்பதும்...
ரமலான் மாதத்தின் கண்கொள்ளாக் காட்சிகள்!

மனிதகுலம் சகோதர பாசத்தோடு ஒன்றிணைந்து தங்கள் வேற்றுமைகள் மறந்து தீண்டாமை மறந்து தோளோடுதோள் சேர்ந்து நின்று தொழும் காட்சியும் ஒரே தட்டில் பகிர்ந்துண்ணும் காட்சியும் அதைக் காண்பவர்களுக்கே குதூகலம் அளிக்கும் ஒன்று என்றால் அதை அனுபவிக்கும் அங்கத்தினர்களின் உள்ளங்களில் எழும் மகிழ்ச்சியை எழுத்தில் எவ்வாறு வடிக்க இயலும்?

இல்லங்களில் பெரியோர்களைப் பார்த்து ஐந்து வயதுக் குழந்தைகளும் கூட நோன்பு வைக்க ஆசைப்படுவதும், பெற்றோர்களின் தடையையும் மீறி அவை உணவைத் தவிர்ப்பதும், ஆசையாக அவர்கள் உண்ணும் பொருட்களை கையில் பிடித்தபடியே நோன்பு துறக்கும் வேளை வரைப் பொறுமை காத்து பிறகு உண்பதும் இல்லங்களில் நாம் காணும் காட்சிகள்!

விடியற்காலை நோன்பைத் துவங்கும்போது உண்ணும் உணவுக்காக பெரியவர்களை எழுப்பும்போது குழந்தைகளை எழுப்பாமல் போனால் காலையில் அவர்கள் செய்யும் களேபரங்களைப் பார்க்கத்தான் வேண்டும்!

உலகம் பசியை தணிப்பதற்காகவே இயங்கி வருவதை நாம் அறிவோம். ‘பசி வந்தால் பத்தும் பறந்து போகும்!’ என்பது பழமொழி. பசியின் முற்றிய நிலையில் மனிதனின் மனோநிலை எப்படி இருக்கும் என்பதையே இப்பழமொழி நமக்கு எடுத்துக் கூறுகிறது. ஒரு பத்து பேரை மதிய உணவுக்காக விருந்துக்கு அழைத்து இரண்டு மணிநேரம் காத்திருக்க வைத்துப் பாருங்கள்... பசியின் கொடுமையான விளைவுகளை அறிந்து கொள்ள முடியும்!

குழந்தைகள் முதல் பெரியோர் வரை உலக மக்கள்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்களை எவ்வளவு சுயக்கட்டுப்பாடு மிக்கவர்களாக ரமலான் வார்த்தேடுக்கிறது பாருங்கள். அவர்களைப் பகல் முழுக்க பட்டினி போட்டு அதே வேளையில் அவர்களுக்குக் கையெட்டும் தூரத்தில் உணவுக் குவியலையும் வைத்துவிட்டு மாலைவரை பொறுமை காத்து வருமாறு கட்டளையிட்டு அதே வேளையில் இயல்பு வாழ்க்கை வாழவைக்கும் இறைவனின் இந்த பயிற்சிக்கு இணையான ஒன்றை நாம் வேறெங்கும் காண முடியுமா?

உலகெங்கும் பரவிக்கிடக்கும் தன் அடியார்கள் அனைவருக்கும் பகலில் பசி என்ற சீருடை அணிவித்து மாலையில் அவர்கள் சகோதர பாசத்தோடு பசியாறும் அழகைக் கண்டு ரசிப்பதில் இறைவனுக்கு அலாதி இன்பமோ?

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் உள்ளன: ஒன்று அவன் நோன்பு திறக்கும் நேரத்தில் ஏற்படக்கூடியது, மற்றது (நாளை மறுமையில்) அவனது இறைவனை சந்திக்கும் பொழுது ஏற்படக்கூடியது’ (புஹாரி, முஸ்லிம்).

# நோன்பும் நோக்கமும்

நோன்பு என்பது இறைவனிடத்திலுள்ள நன்மையை எதிர்பார்த்தவராக பசி, தாகம், இச்சை இவைகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட நேரம் வரை - அதாவது விடியற்காலையில் இருந்து சூரியன் மறையும் நேரம் வரை - கட்டுப்படுத்திக் கொள்வதாகும். நோன்பின் நோக்கமே இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான்.

விசுவாசங் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது, (அதனால்) நீங்கள் (உள்ளச்சம் பெற்று) பயபக்தியுடையவர்களாகலாம். (திருக்குர்ஆன் 2: 183)

இறைவனுக்கு பயந்து, அவன் ஏவியவைகளை செய்தும், தடை செய்தவைகளை தவிர்த்தும் பொறுப்புணர்வோடு நடப்பதுதான் இறையச்சமாகும். அதற்கு உரிய பயிற்சியை நோன்பு கொடுக்கின்றது. பசியோடும், தாகத்தோடும் இருப்பது மாத்திரம் நோன்பாகாது. இவைகளை கட்டுப்படுத்துவது போல் மற்ற எல்லா பாவங்களையும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

● யார் கெட்ட பேச்சுக்களையும், கெட்ட செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவர் உணவை விடுவதிலும், குடிப்பை விடுவதிலும் இறைவனுக்கு எந்த தேவையும் இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: நபிமொழி நூல் புகாரி)

● எத்தனையோ நோன்பாளிகள் தனது நோன்பிலிருந்து பசியைத்தான் உணர்கிறார்களே தவிர வேறு எதையும் உணர்வதில்லை. எத்தனையோ இரவு நேரங்களில் நின்று வணங்கும் தொழுகையாளிகள் கண்விழித்தைத்தவிர வேறு எதையும் உணர்வதில்லை.( அறிவிப்பாளர்: அபுஹுரைரா (ரழி) நூல்: நஸயி, இப்னுமாஜா, ஹாகிம்.)

ரமலான் மாதத்தில் முஸ்லிமான, வயது வந்த, புத்தி சுவாதினமுள்ள, ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் நோன்பு நோற்பது கடமையாகும்.

## நோன்பின் மாண்புகள்

● **நோன்பு பரிந்து பேசும்:** 'நோன்பும், அல் குர்ஆனும், மறுமையில் ஓர் அடியானுக்காக பரிந்து பேசும்: நோன்பு கூறும், 'நான் இவ்வடியானை உணவை விட்டும், இச்சைகளை விட்டும் தடுத்திருந்தேன் இவன் விடயத்தில் பரிந்துரைப்பாயாக'! அல்குர்ஆன் கூறும், 'நான் இவனை இரவில் தூங்கவிடாமல் தடுத்திருந்தேன் எனவே இவனுக்கு பரிந்துரை செய்வாயாக' என நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்).

● **நோன்பை போன்ற ஓர் நற்காரியம் இல்லை:** 'நான் நபிகளார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! எனக்கு அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைத் பெற்றுத் தரும் ஒரு காரியத்தை கட்டளையிடுவீராக எனக் கேட்டேன். அதற்கு அன்னார் நான் உனக்கு நோன்பை உபதேசிக்கிறேன், அதை போன்று ஒன்று இல்லை' என கூறினார்கள், என அபூ உமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நஸாஈ).

- **கணக்கின்றி கூலி வழங்கப்படும்:** 'ஆதமுடைய மகனின் ஒவ்வொரு அமலுக்கும் (செயலுக்கும்) பத்திலிருந்து எழு நூறு மடங்கு வரை கூலி பெருக்கி கொடுக்கப்படுகிறது நோன்பைத் தவிர. நிச்சயமாக அது எனக்குரியதாகும், நானே அதற்கு கூலி வழங்குவேன்' என அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
- **நோன்பின் கூலி சுவர்க்கம்:** 'நிச்சயமாக சுவர்க்கத்தில் ஒரு வாசல் இருக்கிறது, அதற்கு ரய்யான் என்று சொல்லப்படும். அவ்வாசல் வழியாக நோன்பாளிகள் மாத்திரம் நுழைவார்கள், அவர்களல்லாது வேறு யாரும் அதனால் நுழைய மாட்டார்கள், அவர்கள் நுழைந்தவுடன் அவ்வாசல் மூடப்பட்டு விடும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).
- **நரகத்தை விட்டு பாதுகாப்பு:** 'எவர் அல்லாஹ்வின் பாதையில் ஒரு நாள் நோன்பு நோற்பாரோ அல்லாஹ் அவரது முகத்தை நரகத்தை விட்டு எழுபது ஆண்டுகளுடைய தொலைவுக்கு தூரப்படுத்தப்படுவான்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).

- **கேடயம்:** 'நோன்பு ஒரு அடியானை நரகத்தை விட்டு தடுக்கும் கேடயமாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அத்தபரானி அல்கபீர்).
- **முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்:** 'எவர் ரமலான்மாதத்தில் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்ப்பார்த்தவராகவும் நோன்பு நோற்கிறாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).
- **மனோ இச்சைகளை கட்டுப்படுத்தும்** : 'வாலிபர்களே! உங்களில் திருமணம் முடிப்பதற்கு சக்தியுடையவர்கள் திருமணம் செய்து கொள்ளட்டும். நிச்சயமாக அது பார்வையை தாழ்த்தக்கூடியதாகவும், மர்மஸ்தானத்தை தவறான வழியின் பக்கம் செல்வதை விட்டுத் தடுக்கக்கூடியதாகவும் இருக்கும். எவர் திருமணம் முடிக்க சக்தி பெறவில்லையோ அவர் நோன்பு இருக்கட்டும், நிச்சயமாக அது அவரை (தவறானவைகளை) விட்டு பாதுகாக்கும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).
- **நோன்பாளிக்கு ஈருலகிலும் மகிழ்ச்சி:** 'நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் உள்ளன: ஒன்று அவன் நோன்பு திறக்கும் நேரத்தில் ஏற்படக்கூடியது, மற்றது (நாளை மறுமையில்) அவனது ரப்பை சந்திக்கும் பொழுது ஏற்படக்கூடியது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்).
- **கஸ்தூரியை விட சிறந்த வாடை**: 'எனது உயிர் எவன் கை வசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக நோன்பாளியின் வாயிலிருந்து வரக்கூடிய வாடை அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட சிறந்ததாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(புஹாரி, முஸ்லிம்).

# ரமலான் மாதத்தின் சிறப்புகள்

**திருக்குர்ஆனும் ரமலானும்**

திருக்குர்ஆன் என்ற பேரற்புதம் மனிதகுலத்தின் நன்மையை நாடி இறைவனால் அருளப்பட்ட மாதமே ரமலான்! அதற்கு நன்றி கூறும் முகமாகவே திருமறைக் குர்ஆனின் வெளிப்பாட்டின் துவக்கத்தைக் கொண்டாடும் விதமாகவே இம்மாதம் உலகெங்கும் கண்ணியப்படுத்தப் படுகிறது. உயிரோடிருக்கும்போது இம்மாதத்தை அடையும் ஒவ்வொருவர் மீதும் பகலில் விரதமிருப்பது படைத்த இறைவனால் கடமையாக்கப் பட்டுள்ளது. அந்தக் கட்டளையைத் தாங்கி வரும் வசனம் இதோ:

ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும், (நன்மை ~ தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது, ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும், ......,, (திருக்குர்ஆன் 2:185)

● ரமலானின் ஒவ்வொரு இரவிலும் வானவர் ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களை சந்தித்து திருக்குர்ஆனை ஓதிக்காட்டுவார்கள்' (புஹாரி)

வானவர் ஜிப்ரீல்தான் நபிகள் நாயகம் இறைத்தூதராக நியமிக்கப்பட்ட பின் தொடர்ச்சியாக அவரது மரணம் வரையிலும் சிறிதுசிறிதாக திருக்குர்ஆனின் வசனங்களைக் கொண்டுவந்து அவற்றை நபிகளாருக்கு ஓதிக் காட்டி அவற்றை மனப்பாடம் செய்யவைத்தவர் என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

இச்செய்திகள் திருக்குர்ஆனுக்கும் ரமலானுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை தெளிவுபடுத்துகிறது.

ரமலான் மாதத்தில் திருக்குர்ஆனுடனான தொடர்பை இறைநம்பிக்கை யாளர்கள் புதுப்பித்துக் கொள்ளவும் அதன்படி வாழ்வை அமைத்துக் கொள்ளவும் கடமைப்பட்டுள்ளார்கள். குர்ஆனை படிப்பதன் மூலம், அதனை ஆராய்வதன் மூலம், அதன் வழி நடப்பதன் மூலம், வாழ்க்கையின் எல்லா சந்தர்ப்பங்களிலும் அதை தீர்வாக ஆக்கிக் கொள்வதன் மூலம் அதன் பக்கம் நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**ரமலான் மாதத்தின் துவக்கம்**

ரமலான் மாதத்திற்குரிய பிறையை பார்ப்பதன் மூலமோ பிறை தென்படாத பொழுது அதற்கு முந்தைய மாதமான ஷஅபானை முப்பதாக கணக்கிடுவதன் மூலமோ நோன்பு நோற்பதைத் தொடங்க வேண்டும்.

● 'பிறைப் பார்த்து நோன்பு வையுங்கள், மேக மூட்டம் போன்ற காரணங்களால் பிறை தென்பட வில்லையானால் ஷஅபான் மாதத்தை முப்பதாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

**மறைவுலக விசேஷங்கள்**

நமக்குக் கண்ணுக்குத்தெரியாத மறைவுலகில் பற்பல விசேஷங்கள் நிகழ்வதாக இறைவனின் தூதர் அவர்கள் கூறுகிறார்கள்:

● ரமலான் மாதம் ஆகிவிட்டால் அருளின் வாயில்கள் திறக்கப்படுகின்றன் நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன் ஷைத்தான்கள் சங்கிலியால் விலங்கிடப்படுகின்றனர்.
(இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: முஸ்லிம் 1957)

● முன் பாவங்கள் மன்னிக்கப்படும் மாதம் - நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் யார் ரமளானில் நோன்பு நோற்று வணங்குகிறாரோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்டுகின்றன.
(இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: திர்மிதி 619.)

● "யார் ரமலான் மாதத்தை அடைந்தும் பாவம் மன்னிக்கப்படாமல் மரணித்தானோ அவனை அல்லாஹ் (தன் அருளை விட்டும்) தூரமாக்குவானாக!" என ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பிரார்த்தனை செய்ய, நபி (ஸல்) அவர்கள் அதற்கு ஆமீன் கூறினார்கள்.

● யார் இம்மாதத்தின் நன்மையை இழந்தானோ அவன் எல்லா நன்மைகளையும் இழந்தவனாவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

● 'ரமலானுடைய ஒவ்வொரு இரவிலும் பகலிலும் நரகத்திற்குரியவர்கள் விடுதலைச் செய்யப்படுகின்றனர், இன்னும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பிரார்த்தனை இருக்கிறது' என நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்).

● 'ஐந்து வேளைத் தொழுகை, ஒரு ஜும்ஆவிலிருந்து மற்றொரு ஜும்ஆ, ஒரு ரமலானிலிருந்து மற்றொரு ரமலான் அவைகளுக்கு மத்தியில் நிகழ்ந்த பாவங்களுக்கு பரிகாரமாகும். பெரும் பாவங்களைத் தவிர' என நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## ஈகைத் திருநாள் அல்லது ஈதுல் ஃபித்ர்

இறைவன் தன் அடியார்கள் இந்த தற்காலிக வாழ்வு என்ற பரீட்சையில் வெற்றிபெற்று அவர்கள் சொர்க்கம் செல்லவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வருடத்திலும் அல்லாஹ் பல விசேஷ தினங்களை ஏற்படுத்தி அவற்றில் நற்காரியங்களை அதிகமாகச் செய்ய வாய்ப்பளிக்கிறான். அவ்வாறு செய்யும் நற்செயல்களுக்கு பன் மடங்கு நன்மைகளையும் வாரிவாரி வழங்குகிறான். அப்படிப்பட்ட நாட்களைக் கொண்டதுதான் ரமலான் மாதமும், இம்மாதத்தில் ஒரு குறிப்பிட்ட இரவு இருக்கின்றது, அது ஆயிரம் மாதங்களை விட சிறந்தது என்று கூறுகிறது குர்ஆன்.

பாவமன்னிப்பு, நரகத்திலிருந்து விடுதலை, ஷைத்தான்களுக்கு விலங்கு, நற்செயல்களுக்கு அளவில்லாத கூலி என இறைவனின் கருணை மழை பொழியும் ரமலான் மாதம் ஈகைத் திருநாளோடு முடிகிறது. இந்தத் திருநாளை ஏழைகளும் நலிந்தோரும் உட்பட அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக தான் உண்ணும் உணவு தானியங்களை தன்னைச் சூழவுள்ள ஏழைகளை கண்டறிந்து கட்டாயமாக வழங்கிவிட்டே வசதி உள்ளோர் கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்துகிறது இஸ்லாம்.

# ரமலானுக்கு ஏனிந்த சிறப்பு ?

உலகெங்கும் வருடாவருடம் கொண்டாடப்படும் இந்த மனித சமத்துவ, சகோதரத்துவ விழாவின் பின்னணி என்ன?

இந்த மாதத்தில் ஒரு இரவு இருப்பதாகவும் அது ஆயிரம் மாதங்களைவிட சிறந்தது என்றும் அன்று வானவர்கள் இப்பூலோகம் வந்து கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதாகவும் இறைவனின் திருமறை கூறுகிறது. அவ்விரவின் மகத்துவத்தை அடைவதற்காகவே இறை விசுவாசிகள் ரமலான் மாதத்தின் இறுதிப்பகுதியில் பத்து இரவுகள் பள்ளிவாசல்களில் முழுமையாகத் தங்கி இறைவழிபாடுகளில் ஈடுபடுகிறார்கள்.

விசுவாசிகளின் தொழுகை, தானதர்மங்கள் போன்ற ஒவ்வொரு நற்செயல்களுக்கும் பொதுவாக பத்து முதல் எழுநூறு மடங்கு வரை அதிகமாக நற்கூலி வழங்கப்படுகின்றன. ஆனால் இம்மாதம் அவற்றிற்கு கணக்கின்றி நற்கூலிகள் வழங்கப் படுகின்றன.

இந்த ரமலான் மாதத்திற்கு அப்படியென்ன சிறப்பு?
அதற்கு ஒரு மிகச்சிறந்த காரணம் இருக்கிறது!

அது என்ன?
அதை அறிய வரலாற்றில் சற்று பின்னோக்கி பயணிப்போம்...

## அனைத்துமே ஆரம்பமானது அங்கே...

முஹம்மத் நபி அவர்கள் மக்கா நகரில் அன்று உயர்குலமாக அறியப்பட்டிருந்த குரைஷிப் பரம்ரையில் அப்துல்லாஹ் மற்றும் ஆமினா தம்பதியினருக்கு கி.பி. 571ல் பிறந்தார்கள். இவர்கள் தாயின் வயிற்றில் இருக்கும் போது தந்தையாரையும், பிறந்து சில மாதங்களில் தனது தாயாரையும் இழந்தார்கள். அநாதையான இவரை அவர்களின் சிறிய தந்தை அபூதாலிப் என்பவர் பெறுப்பேற்று வளர்த்தார்கள். அநதையாகவே வளர்ந்தாலும் நற்பண்புள்ளவராகவும் உண்மையாளராகவும் திகழ்ந்த இவரை மக்கள் அல் அமீன் (பொருள்: நம்பிக்கைக்கு உரியவர்) என்று பட்டம் சூட்டி அழைத்தனர்.

ஆனால் அவரைச்சுற்றி அனாசாரங்களும் மூடநம்பிக்கைகளும் அநியாயங்களும் அட்டூழியங்களும் வெகுவாகப் பரவியிருந்தன. அங்கு மக்கள் முன்னோர்கள் விட்டுச்சென்ற முடமான பழக்கவழக்கங்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்தனர். யாரென்றே தெரியாதவர்களுக்கு எல்லாம் சிலைகள் வைத்து வணங்கினார்கள். கடவுளின் பெயரால் புரோகிதர்கள் கற்பித்த மூடநம்பிக்கைகளையும் வீண் சடங்குகளையும் மறுகேள்வி கேட்காமல் பின்பற்றினார்கள். பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தனர், மது குடித்தனர், மனித உயிர்களை துச்சமாக மதித்தனர், பெண்களை அடிமைகளாக நடத்தினர், சாதராண வி'யத்திற்காக பலஆண்டுகள் தொடராக சண்டை இட்டுக் கொண்டனர், நிறவெறி, கோத்திரவெறி, தேசியவாதம், சாதியம் போன்ற தீமைகள் கட்டுக்கடங்காமல் மக்களை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

**விடியலுக்கு ஏங்கிய உள்ளம்**

இப்படிப்பட்ட சூழலில் அனைத்துமே அனைவருமே பாவங்களில் மூழ்கியிருப்பதால் நன்மை எது, நீதி எது, நியாயம் எது என்பதையே யாரும் சிந்திக்காமல் இருக்கும் நிலை! ஆனால் நபிகள் நாயகத்தின் மனம் மட்டும் அங்கு இதற்கோர் விடிவு பிறக்காதா என்று ஏங்கியது! அவரால் அந்த அசிங்க சூழலை சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதன் விளைவாக அவர் மனம் தனிமையை விரும்பியது.

அவருக்கு அப்போது நாற்பது வயது நெருங்கியிருந்தது. சத்துமாவையும் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு மக்காவிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள நூர் மலையின் ஹிரா குகைக்குச் செல்லத் தொடங்கினார். அக்குகை நான்கு முழ நீளமும் ஒன்றே முக்கால் முழ அகலமும் கொண்டது. ரமழான் மாதத்தில் அங்கு தங்கி வணக்க வழிபாடுகளிலும், இப்புவியையும் அதைத் தாண்டிய பிரபஞ்சத்தையும் இயக்கும் அபார சக்தியைப்பற்றி சிந்திப்பதிலும் ஈடுபட்டார்கள்.

**அன்று பெய்தது தேன்மழை!**

இப்படிப்பட்ட அந்த சூழலில்... அந்த ரமலான் மாதத்தின் ஒரு இரவில்தான்... அந்த பேரற்புதம் நிகழ்ந்தது! ஆம் மனித வரலாற்றின் போக்கை மாற்றி எழுதிய அந்த அற்புதம்! விண்ணும் மண்ணும் உறவைப் புதுப்பித்துக்கொண்ட அற்புதம்! வருடங்களாக வறண்டு கிடந்த வானம் பார்த்த பூமியின்மேல் வான்மழை பொழிந்தால் எப்படியிருக்கும்? அதுவும் பொழிந்தது தேன்மழையாக இருந்தால் கேட்கவும் வேண்டுமோ? ஆம் அன்று பெய்த தேன்மழை அன்றோடு நின்று விடவில்லை. தொடர்ந்து பெய்தன அத்தேன் துளிகள்! நபிகளார் இப்புவியில் நடமாடிய காலம் வரை தொடர்ந்து சிறுகச்சிறுகப் பெய்தன அந்த அமுதத்தின் துளிகள். நபிகளாரின் இதயத்தில் சேகரமான அந்த தேன்துளிகளின் தொகுப்பே இன்று உலகெங்கும் பரவி நிற்கும் திருக்குர்ஆன் என்ற வான்மறை!

அதைப்பற்றி அந்த வான்மறையில் இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

97:1. நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம்.

97:2. மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது?

97:3. கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும்.

ஆம், அது அவ்விரவு ஆயிரம் மாதங்களைவிட மேலோங்கி நிற்கிறது. அந்த அருள் நிரம்பிய இரவும் அது கொண்டுவந்த அருட்கொடையும் இந்த பூமியில் விளைவித்த நன்மைகள் கொஞ்ச நஞ்சமா?


## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிச் செய்திகளை தூய தமிழில் தாங்கிவரும் சமூக சீர்திருத்த மாத இதழ்!

உங்கள் இல்லம் தேடி வர இன்றே உங்கள் முகவரிகளை கீழ்கண்ட எண்ணுக்கு **sms** செய்யுங்கள்:

**HOUSE OF PEACE**, PO BOX 1726, Bangalore 560017

Phone: **9886001357**

# மனித வரலாற்றை திசைத்திருப்பிய பெருநிகழ்வு

கட்டுக்கடங்காத தீமைகளும் அமைதியின்மையும் மக்களை அலைக்கழித்துக் கொண்டிருந்த மக்கா நகரில் முஹம்மது (ஸல்) அதிலிருந்து ஒரு விடிவு பிறக்காதா என்று ஏக்கத்தோடு அருகில் உள்ள ஹிரா என்ற குகையில் தனிமையில் இறைவனை நினைத்து வணக்க வழிபாடுகளில் மூழ்கி இருந்த வேளைதான் அந்த பெருநிகழ்வு நிகழ்ந்தது... அதைப்பற்றி நபிமொழித் தொகுப்புகளில் காணக்கிடைக்கும் குறிப்பைக் கீழே காண்போம்:

நபி (ஸல்) அவர்களுக்கு வந்த வஹி (இறைச்செய்தி) தூக்கத்தில் தோன்றும் நல்ல கனவுகளாகவே ஆரம்பத்தில் இருந்தது. அவர்கள் எந்தக் கனவு கண்டாலும் அதிகாலையின் விடியலைப் போன்று அவை தெளிவாக அப்படியே நடக்கும். பின்னர் தனிமையை விரும்பினார்கள். ஹிரா குகையில் தனித்திருந்து பல இரவுகள் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். பிறகு தனது குடும்பத்தாரிடம் திரும்பி வருவார்கள். அப்போது உணவையும் தம்மோடு எடுத்துச் செல்வார்கள். உணவு தீர்ந்தவுடன் கதீஜா (ரழி) அவர்களிடம் வந்து மீண்டும் உணவை எடுத்துச் செல்வார்கள்.

இந்த நிலையில்தான் ஹிரா குகையில் அவர்களுக்கு அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. இறைவனிடம் இருந்து செய்தியோடு அந்த ஜிப்ரீல் என்ற வானவர் குகைக்குள் வந்தார்! முன்பின் அறிந்திராத ஒரு உருவம்!

நபிகளாருக்கு ஒரே அதிர்ச்சி!

வந்த வானவர் நபியவர்களிடம் கூறினார், “ஓதுவீராக!” என்று.

.நபிகளார், “நான் ஓதத் தெரிந்தவனில்லையே!” என்றார்கள்.

நபிகளார் இந்நிலையைப் பற்றி பின்வருமாறு விவரித்தார்கள்:

“பிறகு அவர் என்னைப் பிடித்து நான் சிரமப்படும் அளவுக்கு இறுகக் கட்டியணைத்தார். பிறகு என்னை விட்டுவிட்டு “ஓதுவீராக!” என்றார். (அப்போதும்) “நான் ஓதத் தெரிந்தவனில்லையே!” என்றேன். மீண்டும் என்னை இறுகக் கட்டியணைத்துவிட்டு “ஓதுவீராக!” என்றார். (அப்போதும்) “நான் ஓதத் தெரிந்தவனில்லையே!” என்றேன். அவர் என்னைப் பிடித்து மூன்றாவது முறையும் கட்டியணைத்துவிட்டு,

(முஹம்மதே!) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை கருவுற்ற சினை முட்டையிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் கண்ணியமானவன். அவனே எழுது கோலால் கற்றுத் தந்தான். அறியாதவற்றை மனிதனுக்குக் கற்றுத் தந்தான். (திருக்குர்ஆன் 96:1-5)

என்ற வசனங்களை ஓதிக் காட்டினார்.”

பிறகு நபிகளார் அந்த வசனங்களுடன் இதயம் நடுங்க தமது துணைவியார் கதீஜா(ரழி) அவர்களிடம் வந்து “என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்” என்றார்கள்.

கதீஜா(ரழி) நபி (ஸல்) அவர்களைப் போர்த்தினார்கள். (நடுக்கம்

தீர்ந்ததும்) கதீஜாவிடம் நடந்த செய்தியைத் தெரிவித்து விட்டுத் தமக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ எனத் தாம் அஞ்சுவதாகக் கூறினார்கள்.

அதற்கு கதீஜா(ரழி) "அவ்வாறு கூறாதீர்கள்! இறைவன் மீது ஆணையாக! இறைவன் உங்களை ஒருபோதும் இழிவுபடுத்தமாட்டான். ஏனெனில் தாங்கள் உறவினர்களுடன் இணங்கி வாழ்கிறீர்கள் சிரமப்படுவோரின் சுமைகளை சுமந்து கொள்கிறீர்கள். வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள் விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள் உண்மையான சோதனைகளில் சிக்குண்டோருக்கு உதவி புரிகின்றீர்கள்" என்றார்கள்.

பின்னர் நபி (ஸல்) அவர்களைத் தமது தந்தையின் உடன் பிறந்தவரான வரகா பின் நவ்.்.பல் என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

வரகா கிருஸ்துவராக இருந்தார். அவர் இப்ரானி (ஹிப்ரூ) மொழியை அறிந்தவர் இன்ஜீல் வேதத்தைக் கற்றவர் வயது முதிர்ந்தவர் கண்பார்வையற்றவர் அவரிடம் கதீஜா (ரழி) "என் சகோதரரே! உம் சகோதரன் மகன் கூறுவதைக் கேளுங்கள்!" என்றார்.

"என் சகோதரர் மகனே! நீர் எதைக் கண்டீர்!" என வரகா கேட்டார்.

நபி(ஸல்) அவர்கள் தாம் பார்த்த செய்திகளை அவரிடம் சொன்னார்கள். அதற்கு வரகா "இவர்தாம் மூஸாவிடம் இறைவன் அனுப்பிய நாமூஸ் (ஜிப்ரீல்) ஆவார்" என்று கூறிவிட்டு, "உங்களது சமூகத்தார் உங்களை உங்கள் ஊரிலிருந்து வெளியேற்றும் சமயத்தில் நான் உயிருடன் திடகாத்திரமான இளைஞனாக இருக்க வேண்டுமே!" என்று அங்கலாய்த்தார்.

நபி (ஸல்) அவர்களுக்கோ அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி!

"மக்கள் என்னையா வெளியேற்றுவார்கள்?" என்று கேட்டார்கள்.

வரகா கூறினார், "ஆம்! நீங்கள் கொண்டு வந்திருப்பது போன்ற சத்தியத்தைக் கொண்டு வந்த எந்த மனிதரும் (மக்களால்) பகைத்துக் கொள்ளப்படாமல் இருந்ததில்லை. (நீங்கள் வெளியேற்றப்படும்) அந்நாளில் நான் உயிருடன் இருந்தால் உங்களுக்கு பலமான உதவி செய்வேன்"

இந்நிகழ்ச்சிக்குப் பின் வரகா குறுகிய காலத்தில் இறந்துவிட்டார்.

முதல் முதலாக இறைவனிடம் இருந்து நபிகளாருக்கு வந்த இறைச் செய்தி பற்றிய சரித்திரம் இதுவே. (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

இந்த சம்பவம் நிகழ்ந்த பிறகு சிறிது இடைவெளிக்குப் பிறகு வானவர் ஜிப்ரீல் தொடர்ந்து இறைவனிடம் இருந்து சிறுகச்சிறுக வேதவரிகளைக் கொண்டுவந்தார். அந்த வைரவரிகள் வெறும் ஓதப்படும் மந்திரங்களாக இருக்கவில்லை. முழு மனிதகுலத்துக்கும் இறைவனின் கட்டளைகளையும் அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும் தாங்கியவையாக இருந்தன.

இவ்வாறு அகிலத்தைப் படைத்தவனின் தூதராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதல் அயராது பணியாற்றத் தொடங்கினார் நபிகளார். தொடர்ந்து இறைவனைப் பற்றியும் வாழ்க்கையின் நோக்கம் பற்றியும் மறுமை வாழ்வு பற்றியும் மக்களுக்கு சத்தியத்தை எடுத்துச் சொல்லி இஸ்லாம் என்ற இறைவன் வகுத்தளிக்கும் வாழ்க்கை நெறியின் பக்கம் அழைத்தார்கள்.

ஆம், இந்தப் பெருநிகழ்வுதான் இன்று நாம் காணும் உலகத்தின் வரலாற்றை மாற்றி எழுதியது! அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் விடிவு உண்டு என்று பறைசாற்றியது!

# திருக்குர்ஆன் நிகழ்த்திய முதல் புரட்சி

முதன் முதலாக இறைவன் புறத்திலிருந்து நபிகளாருக்கு இறங்கிய வசனங்கள் இவையே:

**(முஹம்மதே!) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை கருவுற்ற சினை முட்டையிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் கண்ணியமானவன். அவனே எழுது கோலால் கற்றுத் தந்தான். அறியாதவற்றை மனிதனுக்குக் கற்றுத் தந்தான். (திருக்குர்ஆன் 96:1-5)**

இவற்றைத் தொடர்ந்து மக்களை சத்தியத்தின்பால் அழைக்குமாறு இறைவனால் ஏவப்பட்டார்கள் நபிகளார். இறைவனின் தூதர் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு ஆரம்பத்தில் தன் குடும்பத்தாரிடமும் உற்ற தோழர்களிடமும் சத்தியப் பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள். மெல்லமெல்ல பொதுமக்களிடமும் ஆதிக்க வர்க்கத்தையும் சத்தியத்தின் பால் அழைத்தார்கள் நபிகளார்.

### திருக்குர்ஆனின் சீர்திருத்தக் கருத்துக்கள்

தனக்குக் கிட்டிய இறைவசனங்களில் மற்றும் இறைகட்டளைகளின் அடிப்படையில் நபிகளார் போதித்த சீர்திருத்தக் கருத்துக்கள் இவையே:

● ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்த நீங்கள் ஒருவருக்கு ஒருவர் சகோதரர்களே. குலமோ, இனமோ மொழியோ நிறமோ இடமோ உங்களைப் பிரித்துவிடக் கூடாது. உங்களுக்குள் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டும் சுரண்டிக் கொண்டும் மோசடி செய்தும் அமைதி இழந்து தவித்துக் கொண்டிருக்கும் என் சமுதாயமே! வாருங்கள் இதற்கொரு முடிவு கட்டுவோம்! ஒரு இனிய புதிய விடியலை நோக்கிப் பயணிப்போம்! இந்த குறிக்கோளை அடைய நீங்கள் மறந்துபோன சில உண்மைகளை நினைவூட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அழைக்கவே நான் இறைவனால் அனுப்பப் பட்டுள்ளேன்.

### மறுக்கமுடியாத உண்மைகள்

● நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய முதல் உண்மை எதுவெனில் இவ்வுலகத்தை படைத்த இறைவன் ஒரே ஒருவனே என்பதும் அவன் மட்டுமே நம் வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதுதான். அவன்தான் நமக்கு தன் புறத்திலிருந்து எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கி நம்மை பரிபாலித்துக் கொண்டிருக்கிறான். அவன் மட்டுமே நம் நன்றிக்கும் வணக்கத்திற்கும் தகுதியானவனும் நம் பிரார்த்தனைகளை ஏற்பவனும் ஆவான். அவனைத் தவிர மற்ற அனைத்துமே அவனது படைப்பினங்களே. அவற்றை வணங்குவதும் உயிரற்ற உணர்வற்ற பொருட்களை கடவுள் என்று அழைப்பதும் எல்லாம் இறைவனை சிறுமைப் படுத்தும் செயலும் வீணும் மோசடியும் ஆகும். எனவே பொய்யான தெய்வங்களை விட்டுவிட்டு படைத்தவன்பால் வாருங்கள்.

● அடுத்த உண்மை, இவ்வுலகம் தற்காலிகமான ஒரு பரீட்சைக்கூடம் போன்றது. இதில் நீங்கள் இறைவனின் வழிகாட்டுதல் படி அவன் கூறும் நன்மைகளைச் செய்தும் தீமைகளில் இருந்து விலகியும் வாழ்ந்தீர்களானால் உங்கள் தனி நபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் அமைதியைக் காண முடியும். அவ்வாறு நீங்கள் படைத்தவனுக்குக் கட்டுப் பட்டு வாழ்ந்தீர்களானால் அதற்குப் பரிசாக அவன் மறுமையில் நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்கத்தில் உங்களைப் புகுத்துவான். மாறாக அவனுக்குக் கட்டுப் படாமல்

தான்தோன்றித்தனமாக வாழ்ந்தீர்களானால் அதற்கு தண்டனையாக மறுமையில் நரகத்தையும் வைத்துள்ளான். கொலை, கொள்ளை, வட்டி, சூதாட்டம், விபச்சாரம், போதைப்பொருட்கள், பொய், பித்தலாட்டம், மோசடி, ஏமாற்றுதல், உரிமை மீறல்கள் போன்ற இறைவன் தடுத்த எல்லா செயல்களுக்கும் இறைவனிடம் விசாரணையும் தண்டனையும் உண்டு.

● இந்த மறுக்கமுடியாத சத்தியங்களை ஏற்றுக் கொண்டு இறைவனிடம் திரும்புங்கள். அவன் நமக்காக வகுத்துத் தந்துள்ள அழகிய வாழ்க்கைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அவனது எவல் விலக்கல்களை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்தால் இம்மையிலும் நீங்கள் அமைதி காண்பீர்கள். மறுமையிலும் சொர்க்கத்தை அடைவீர்கள். எனவே வாருங்கள் சகோதர சகோதரிகளே, பூமியை அமைதிப் பூங்காவாக மாற்றுவோம். இணைந்து செயல்படுவோம்!

எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தத் திட்டத்தின் பால்தான் நபிகள் நாயகம் (ஸல்) மக்களை அழைத்தார்.

## எழுச்சியும் எதிர்ப்பும்!

க.்.பா என்னும் ஆலயத்திலும், அதைச் சுற்றிலும் சிலைகளை நிறுவி அவற்றின் வழிபாட்டில் ஆழமாக மூழ்கிக்கிடந்த சமுதாயத்தில் "ஒரே ஒரு கடவுளை- அதாவது படைத்தவனை -மட்டும்தான் வணங்க வேண்டும் மற்றவை கடவுள் அல்ல" என்று கூறினால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் அனுமானிக்க முடியும்.

ஆம், நபிகள் நாயகம் இந்த ஏக இறைக்கொள்கையைச் சொல்லச் சொல்ல மக்கள் மத்தியில் புரட்சி புயலென எழுந்தது. ஆரம்பத்தில் ஒருசில பலவீனமானவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும்தான் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். நாளடைவில் மற்றவர்களையும் கவர ஆரம்பித்தது. ஆனால் மூதாதையர்கள் வளர்த்த மூடப் பழக்கவழக்கங்களில் மூழ்கிப் போயிருந்த பெரும்பான்மை மக்களோ இக்கொள்கைக்கு வன்மையான எதிரிகளாக மாறினார்கள்.

அன்றுவரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளர், நம்பிக்கைக்கு உரியவர் என்றெல்லாம் பாராட்டிய மக்கள் அவருக்கு பைத்தியம் என்று பட்டம் சூட்டினார்கள் அவர்களையும், அவர்களது கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களையும் சொல்லொனாத துன்புறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கினார்கள்.

## அதர்மத்தின் அடக்குமுறைகள் ஆரம்பம்

உதாரணத்திற்காக ஒருசில சம்பவங்களை மட்டும் இங்கு காண்போம்:

● நபிகளார் பிரச்சாரம் செய்யும்போது அவரது முகத்தில் மண்ணை வாரித் தூவினார்கள். 'பைத்தியக்காரர்' 'சூனியக்காரர்" என்று வசை பாடினார்கள்.

● கஅபா ஆலயத்தின் அருகே அவர் தன் நெற்றியை தரையில் வைத்துத் தொழுது கொண்டு இருக்கும்போது அவரது தலைமீது

அறுக்கப் பட்ட ஒட்டகத்தின் சாணத்தையும் இரத்தத்தையும் கழிவுப் பொருட்களையும் கொண்டுவந்து கொட்டி அவர் தம் தலையைத் தூக்க இயலாமல் தத்தளிப்பது கண்டு எள்ளி நகையாடினர்.

- அவர் நடக்கும் பாதையில் முட்களைப் பரப்பிவைத்தார்கள். வீட்டிற்கு முன் கழிவுப் பொருட்களையும் குப்பைகளையும் கொட்டி வைத்தார்கள்.
- தாயிப் என்ற இடத்தில் அவர் பிரச்சாரம் செய்யும் வேளை சிறுவர்களை ஏவிவிட்டு இரத்தம் சிந்த கல்லால் அடித்தார்கள்.
- இக்கொள்கையை ஏற்றுக் கொண்ட நலிந்தோர்களையும் அடிமைகளையும் கொன்று குவித்தார்கள். மூதாதையர்களின் மதங்களையும் கடவுளர்களையும் மதிக்காதவர்களுக்கு இதுதான் கதி என்று மக்களை அச்சுறுத்தினார்கள்.
- ஏக இறைவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன். அவனைத் தவிர எதுவும் வணக்கத்திற்கு உரியவை அல்ல (அரபியில் ‘லா இலாஹ இல்லல்லாஹ்) என்று கூறியமைக்காக பகல் முழுக்க பாலைவனத்து சுடுமணலில் வெற்றுமேனியில் கிடத்தி பாறாங்கற்களை ஏற்றினார்கள்.
- தண்ணீர் தொட்டிமுன் முழங்காலிட வைத்து தலையை நீரில் அழுத்தி மூச்சு முட்ட வைத்து சிலைவழிபாட்டுக்குத் திரும்புமாறு பணித்தார்கள்.
- பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளால் உடலில் சூடிட்டு தாய்மதம் திரும்ப வற்புறுத்தினார்கள்.
- இன்னும் இவைபோன்ற பல்வேறுவகையான சித்திரவதைகளும் ஊரெங்கும் அரங்கேறிக் கொண்டு இருந்தன.

## எதிரிகளை அழிப்பதல்ல, திருத்துவதே நோக்கம்!

இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் - நபிகள் நாயகம் ஒரு புதிய கடவுளை அறிமுகப்படுத்தி அதை வணங்க மக்களை அழைக்கவில்லை. ஒரு புதிய மதத்தை நிறுவி அதில் சேருமாறு மக்களை அழைக்கவில்லை. மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மைபயக்கக் கூடிய ஒரு அழகிய சீர்திருத்தக் கொள்கையை முன்வைத்து அதன்பால்தான் அழைத்தார்கள். இந்த சீர்திருத்த இயக்கத்துக்கு எதிராகத்தான் பயங்கரவாத அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

அனைத்தையும் பொறுமை மற்றும் மன்னிப்பு என்ற வலுவான ஆயுதங்களைக்கொண்டே எதிர்கொண்டார்கள். அதன் காரணமாக எதிரிகளையும் நண்பர்களாக்கி அவர்களைக் கொண்டே தர்மத்தை நிலைநாட்டச் செய்தார்கள். அவர்களை இம்மார்க்கத்தின் காவலர்களாக ஆக்கினார்கள்!

நன்மையும் தீமையும் சமமாக மாட்டா, நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, யாருக்கும் உமக்கிடையே, பகைமை இருந்ததோ, அவர் உற்ற நண்பரே போல் ஆகிவிடுவார்.

பொறுமையாக இருந்தார்களே அவர்கள் தவிர வேறு யாரும் அதை அடைய மாட்டார்கள் மேலும், மகத்தான நற்பாக்கியம் உடையவர்கள் தவிர, வேறு யாரும் அதை அடைய மாட்டார்கள்.(திருக்குர்ஆன் 41:34~ 35)

# உலகை சீர்திருத்திய பெருநிகழ்வு!

நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம். மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். (திருக்குர்ஆன் 97:1-3)

இறைவன் மனிதகுலத்தோடு தன் தொடர்பைப் புதுப்பித்த நாளை ஆயிரம் மாதங்களைவிட சிறந்தது என்று உயர்வாகக் கூறும் அளவுக்கு அது புண்ணியத்தாலும் சிறந்தது, உலகெங்கிலும் அந்த நிகழ்வு உண்டாக்கிய தாக்கத்தாலும் சிறந்தது!

ஆம், அங்கிருந்துதான் துவங்கியது உலகத்தின் மாபரும் புரட்சி! இஸ்லாம் என்ற சீர்திருத்த இயக்கம் உருக்கொண்டு பரவத்துவங்கியது அன்று! உலகெங்கும் வாழும் பலகோடி மக்களைப் பிணைத்திருந்த அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து அவர்களை விடுதலை செய்த புரட்சி! இனம், நிறம், இடம், மொழி, குலம், கோத்திரங்களின் பெயர் சொல்லிப் பிளவுண்டு கிடந்த ஒரு தாய் மக்களை மீண்டும் ஒன்றே குலம், ஒருவனே இறைவன் என்ற மந்திரத்தின் கீழ் ஒருங்கிணைத்து அவர்களிடையே சகோதரப் பாசப் பிணைப்பை பின்னத் தொடங்கிய நாளும் அதுவே!

**அந்த நிகழ்வு மட்டும் நிகழ்ந்திருக்கா விட்டால்....**
**என்ன நடந்திருக்கும்?**

'ஒன்றும் நடந்திருக்காது... எப்போதும் போலவே உலகம் இருந்திருக்கும்' என்று சிந்திக்காதவர்களும் அதன் பயனை உணராதவர்களும் கூறுவார்கள்....

ஆனால் அதன் பயனை உணர்ந்தவர்களைக் கேட்டுப் பாருங்கள்... அவர்கள் கூறுவார்கள்....

'ஓ.... எண்ணிப்பார்க்கவே பயமாக இருக்கிறது...! ' என்று.

அந்த சம்பவத்தின் மூலம் பயனடைந்த ... தொடர்ந்து பயனடைந்து கொண்டிருக்கின்ற உலகெங்கும் பரவிக்கிடக்கும் உலக மக்கள்தொகையின் கால்வாசிக்கும் அதிகமான எண்ணிக்கையில் உள்ள அந்த மக்களைக் கேட்டுப்பாருங்கள் அவர்கள் சொல்வார்கள்...

**அந்த நிகழ்வு மட்டும் நிகழ்ந்திருக்கா விட்டால்....**

- 'நாங்களும் மனிதப்பிறவிகளே என்பதை உலகம் இன்னும் ஏற்றிருக்காது. வெள்ளையர்கள் எங்களை இன்னும் கடைச் சரக்காக விற்றுக்கொண்டிருப்பார்கள். அங்காடியிலும் ஆன்லைனிலும் எங்கள் உடல்களைக் காட்டி எங்களையும் ஏன், எங்கள் கிட்னிகளையும் உறுப்புக்களையும் சர்வசாதாரணமாக விலைபேசிக் கொண்டிருப்பார்கள்! பார்சல்கள் அனுப்பிக் கொண்டிருப்பார்கள்!... என்பார் தங்கள் இருண்ட நிறத்தின் காரணமாக உண்டான அடிமைத்தளைகளிலிருந்து விடுபட்டு ஆப்ரிக்காவிலும் அமெரிக்காவிலும் இன்ன பிற இடங்களிலும் சுதந்திரக் காற்றை சுவாசிப்போர்!
- காலாகாலமாக பீடித்திருந்த ஜாதிக் கொடுமைகளில் இருந்தும் தீண்டாமைத் தீமைகளில் இருந்தும் அந்நிகழ்வு காரணமாக விடுபட்ட ஒரு பெருங்கூட்டம் 'இதுதான் இஸ்லாம் என்று தெரிந்திருந்தால் நாங்கள் இக்கொடுமைகளில் இருந்து எப்போதோ விடுபட்டிருப்போமே! காலம் தாழ்த்தியேனும் இந்த அருட்கொடையை

அடையும் வாய்ப்பை எங்களுக்குத் தந்த இறைவனுக்கு நன்றிகள் பல! அந்த ஒரு நிகழ்வு மட்டும் நடவாதிருந்தால் இன்று வேற்றுமைகள் மறந்து கருப்பரும் வெள்ளையரும் ஏழைகளும் பணக்காரர்களும் அரசனும் ஆண்டியும் ஒரே வரிசையில் தோளோடு தோள் சேர்த்து அணிவகுத்து நின்று இறைவனை வணங்கும் விந்தையையும் ஒரே தட்டில் உணவுண்ணும் விந்தையைக் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது! இறைவன் மிகப்பெரியவன்!' என்று இறைவனின் புகழைப் பாடுவார்கள்.

## பெண்ணினத்தின் குரல்

● 'நாங்கள் இன்று உயிர்வாழ்வதே அந்த நிகழ்வைக் கொண்டுதான்! அது மட்டும் நிகழ்ந்திராவிட்டால் இவ்வுலகையே நாங்கள் கண்டிருக்க மாட்டோம். இன்று நாம் உங்களோடு பேசிக்கொண்டிருக்க மாட்டோம்... எங்களைக் கருவிலேயே கத்திகள் பதம் பார்த்திருக்கும்!... தப்பித்தவறிப் பிறந்திருந்தால் கள்ளிப்பாலும் விஷ ஊசிகளும் விளையாடியிருக்கும்!' என்று தாம் இன்று உயிர் வாழும் அற்புதம் பற்றி பெண்ணினம் பேசும்.

● 'எங்களுக்கும் ஆன்மா உண்டா என்ற சர்ச்சை தொடர்ந்திருக்கும்... எங்களுக்கும் ஆண்களிடம் உரிமைகள் உண்டு என்பதை அறியாமலே பெட்டிப்பாம்பாக வாழ்ந்துகொண்டு இருப்போம். மகளாக, மனைவியாக, தாயாக, குடும்ப உறவுகளோடு உரிய உரிமைகளோடு உணர்வுகளோடு வாழ வழிவகுத்தது அந்த நிகழ்வு. ஆணுக்குப் பெண் சமமே என்ற அந்த சிந்தனைப் புரட்சியை அறிமுகப்படுத்தியது அது. இன்றும் கூட தொடர்ந்து மறுக்கப்பட்டு வரும் பெண்ணுரிமைகளை அன்றே மீட்டுத்தந்தது அந்நிகழ்வு. தலைமுறை தலைமுறைகளாக வரதட்சணை, வைப்பாட்டிகள், கற்பழிப்புக் கொடுமைகளில் இருந்து எம் இனத்தைக் காப்பாற்றிவருகிறது. இன்று நாங்கள் அனுபவிக்கும் சொத்துரிமை, கல்வி பெறும் உரிமை, பேச்சுரிமை, விரும்பியவரை மணந்துகொள்ளும் உரிமை, மணக்கொடை பெறும் உரிமை ஆகியவற்றுக்கு அடித்தளம் இட்டது அந்த அபார நிகழ்வு!' என்பார்கள் உலகெங்கும் வாழும் இஸ்லாமிய மங்கையர் கூட்டம்.

● 'இன்றைய நவீன உலகில் எங்கள் உடல்களைக் கடைச்சரக்காக்கி விற்றுப்பிழைக்கும் கயவர்களிடம் இருந்தும் கற்பழித்துத் தூக்கி எறியும் காமுகர்களின் வஞ்சக வலையில் இருந்தும் தந்தைகள் இல்லா அனாதைக் குழந்தைகளை நாங்கள் கர்ப்பத்தில் சுமக்கும் இழிவில் இருந்தும் நாங்கள் விடுபட்டு கண்ணியமாக பாதுகாப்பாக வாழ்கிறோம் என்றால் அதற்கு வித்திட்டது அந்த நிகழ்வே.' என்பார்கள் இஸ்லாமிய பெண்ணினத்தின் பிரதிநிதிகள்.

## முதியோர் குரல்

● 'எங்கள் பிள்ளைகளைப் பெற்றெடுத்து இறை அச்சத்தோடு வளர்த்ததன் காரணமாக இன்று நாங்கள் எங்கள் பிள்ளைகளின் அரவணைப்பிலேயே பாதுகாப்பாக வாழ்ந்து வருகிறோம். அதற்குக் காரணமாக இருந்தது அந்த நிகழ்வு' என்பார்கள் இஸ்லாமிய முதியோர்கள். அந்நிகழ்வு நிகழாதிருந்தால் இன்று எம்மை உயிருடன் நீங்கள் பார்ப்பது சந்தேகமே. நாங்கள் முதியோர் இல்லங்களில் ஒதுக்கப் பட்டவர்களாகவோ வீடுகளை விட்டு துரத்தப்பட்டவர்களாகவோ ஆகியிருப்போம்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் படுக்கையிலேயே கருணைக் கொலைக்கு நாங்கள் ஆளாகவும் கூடும். இக்கொடுமைகளில் இருந்து காத்த இறைவனுக்கே புகழனைத்தும்’ என்பார்கள் இஸ்லாமிய முதியோர்கள்.

## இல்லத்தரசிகளின் குரல்

● ‘இங்கு உலகில் பரவலாகக் காணும் குடிப்பழக்கத்திற்கு எங்கள் கணவன்மார்கள் ஆளாகியிருப்பார்கள். எங்கள் அண்டை அயலார் வீடுகளில் இன்று காணும் அட்டூழியங்கள் எங்கள் வீடுகளிலும் அன்றாடம் நடந்திருக்கும். கிடைக்கும் சம்பாத்தியத்திற்கு குடித்துவிட்டு வரும் கணவன்மார்களின் அடியும் உதையும் ஏச்சும் பேச்சும் அனுபவித்துப் புழுங்கும் மனைவிமார்கள் படும் அவஸ்தையில் இருந்து காத்தது அந்த மாபெரும் நிகழ்வே’ என்று இஸ்லாமிய மனைவிமார்கள் நன்றிப் பெருக்கோடு புகழ்ந்துரைப்பார்கள்.

## உலகெங்கும் எழும் பலவிதமான குரல்கள்

அந்த நிகழ்வு மட்டும் நிகழ்ந்திருக்கா விட்டால்.... என்ன நடந்திருக்கும்?

இதோ இன்னும் பலவிதமான குரல்கள் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கின்றனவே... அவற்றையும் கேட்போமே...

● இவ்வுலகைப் படைத்தவன் மட்டுமே வணக்கத்திற்குத் தகுதியான ஒரே இறைவன் என்பதை அறியாமல் முன்னோர்கள் கற்பித்தவற்றை எல்லாம் தெய்வங்கள் என நம்பி வணங்கி இருந்திருப்போம். இந்த தெய்வத்தை வணங்கினால் அந்த தெய்வம் கோபித்துக் கொள்ளுமோ அதை வணங்கினால் இது கோபித்துக் கொள்ளுமே என்ற குழப்பங்களுக்கு ஆளாகி அங்கும் இங்கும் தாவிக்கொண்டு இருந்திருப்போம். பாலைவனத்துக்கும் பள்ளத்தாக்குக்கும் மலைகளுக்கும் காடுகளுக்கும் வெவ்வேறு தேவதைகளும் கடவுளர்களும் உண்டென்று நம்பி இன்றும் மோசம் போயிருப்போம்.

● இடைத்தரகர்கள் இன்றி பொருட்செலவின்றி சடங்கு சம்பிரதாயங்கள் இன்றி எளிமையாக யாரும் எப்போதும் இறைவனை நெருங்க முடியும் வணங்கமுடியும் என்பதை மனித குலத்துக்குக் கற்றுக் கொடுத்த அந்த நிகழ்வு மட்டும் நிகழ்ந்திரா விட்டால் இன்றும் நாங்கள் ஆள்தெய்வங்களிடமும் உணர்வில்லாப் பொருட்களின் முன்னாலும் சரணடைந்திருப்போம். எங்கள் சம்பாத்தியங்களை காணிக்கைகளாகக் கொட்டி இருப்போம். சுயமரியாதையை இழந்திருப்போம்!

● எங்கள் முன்னோர்கள் கற்பித்த மூடநம்பிக்கைகளில் மூழ்கிப் போய் எங்கள் குழந்தைகளை இஷ்ட தெய்வங்களுக்கு நாங்களே நரபலிகொடுத்து இருப்போம்! ஆன்மிகம் என்ற போர்வையில் வரும் ஆசாமிகளுக்கு இரையாகி இருப்போம். பெண்களின் கற்புகளை இழந்திருப்போம்.

● நிறத்தின், இனத்தின், சாதிகளின் பெயரால் மூட்டப்படும் தீண்டாமைத் தீயில் மானிட உணர்வுகள் பொசுங்கிப் போய் எங்களை நாங்களே வெட்டி சாய்த்திருப்போம்! சக மனிதன் என் உடன்பிறப்பே என்பதை உணரவைத்த அந்த நிகழ்வு மட்டும் நடவாதிருந்தால் இன்றும் அக்கொடுமைகளுக்கு நாங்களும் துணை போயிருப்போம்.

● இடைத்தரகர்கள் வாய்மொழிகளை வேதங்களாக நம்பி பகுத்தறிவை இழந்திருப்போம்.. அவர்கள் இடுகின்ற கட்டளைகளை சிரமேற்கொண்டு பணிந்திருப்போம்... அவர்களின் பாதங்களைக் கழுவிக் குடித்திருப்போம்.... உழைத்து வியர்வை சிந்தி சேர்த்த எங்கள் சம்பாத்தியங்களை அவர்களின் காலடிகளில் சமர்ப்பித்து இருப்போம்! இவற்றில் இருந்தெல்லாம் எங்களையும் எங்கள் தலைமுறைகளையும் காத்த இறைவனுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் தகும்!

அந்த நிகழ்வினால் பயன்பெற்ற கோடிக்கணக்கான உள்ளங்களின் உணர்வலைகளை எடுத்தெழுத முயன்றாலும் முடியாது.

# திருந்தியோர் குரல்கள்

தனிநபர்களை இந்த நிகழ்வு எப்படி மாற்றியுள்ளது என்று அறிய இன்னும் சில உதாரணங்களை மட்டும் காண்போமே.

● இவ்வுலகில் இறைவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் நாளை அவனிடமே திரும்ப வேண்டியுள்ளது. நம் அத்துமீறல்களுக்கும் பாவங்களுக்கும் விசாரணையும் தண்டனையும் உள்ளது என்ற உணர்வை எனக்கு ஊட்டியது திருக்குர்ஆனே. என் பணியாளர்களிடமும் பணிவுடன் நடந்துகொள்ள ஆரம்பித்தேன்.

● நான் செய்த பாவங்களுக்கு அளவு கிடையாது. இவைகள் மன்னிக்கப்பட வாய்ப்பே இல்லை என்று நம்பிக்கை இழந்து இன்னும் பாவங்களில் மூழ்கினேன். ஆனால் "என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய அருளில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம் ~ நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் ~ நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்க கருணையுடையவன்" (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக. (திருக்குர்ஆன் 39: 53) என்ற வசனம் எனக்கு நம்பிக்கையூட்டி திருத்தியது.

● அறியாமைக் காலத்தில் நான் வாங்கியிருந்த வரதட்சணையைத் திருப்பிக் கொடுக்க வைத்தது திருக்குர்ஆனும் நபிமொழிகளும்.

● பெண் பித்தனாக கண்ட பெண்களுடன் இரவுகளைக் கழித்துக் கொண்டு இருந்த என்னை பண்புள்ளவனாகப் பொறுப்பு மிக்கவனாக மாற்றியது அந்நிகழ்வு!

● குடிபோதையில் ஆடைகளைக் களைந்து உலா வந்து கொண்டு இருந்த நான் திருந்தக் காரணமாக இருந்தது அது!

● திருடனாக இருந்த என்னைத் திருத்தியது அது!

● என் கட்டிய மனைவிக்கும் பெற்றெடுத்த குழந்தைகளுக்கும் செய்து கொண்டிருந்த வஞ்சகங்களில் இருந்து திருத்தியது அது!

இவ்வாறு இறங்கிய நாள்தொட்டு இன்றோடு நாளையோடு என்று முடியாமல் இனி உலகம் உள்ள நாள்வரை திருக்குர்ஆன் செய்துவரும் புரட்சி தொடரும். மனித மனங்களை சீர்திருத்தி அவர்களைக் கொண்டே உலகை சீர்திருத்துவது என்பது இறைவனின் நாட்டமாகும். அவ்வாறு சீர்திருந்தி தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொண்டு வாழ்பவர்களுக்கு இவ்வுலக வாழ்வும் அமைதி மிக்கதாக அமைகிறது. இதற்குப் பரிசாக மறுமையில் இறைவன் புறத்திலிருந்து நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்கமும் கிடைக்கிறது.

# நல்லொழுக்கம் பேணுவதே இஸ்லாம்

இறைவன் கற்பிக்கும் ஏவல் விலக்கல்களுக்கு அடிபணிந்து வாழும் வாழ்க்கை முறைக்கே இஸ்லாம் என்று அரபுமொழியில் வழங்கப் படுகிறது. இஸ்லாம் கீழ்கண்ட மூன்று நம்பிக்கைகளை மனித மனங்களில் ஆழமாக விதைப்பதன் மூலம் மனிதனை பாவங்களில் ஈடுபடுவதில் இருந்து தடுத்து கட்டுப்பாடு மிக்கவனாக ஆக்குகிறது. மேலும் மூடநம்பிக்கைகளில் இருந்தும் பிரிவினை வாதங்களில் இருந்தும் விடுவித்து உலகளாவிய சகோதரத்துவத்தையும் மனித சமத்துவத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்டுகிறது.

## 1. ஒன்றே குலம்:

**மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும்,பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

அதாவது நிறம், இனம், நாடு, மொழி, செல்வம், கல்வி, அந்தஸ்து, பதவி போன்றவை மூலம் உண்டாகும் வேற்றுமைகளைத் தாண்டி சக மனிதன் தன் சகோதரனே என்பதோடு அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த பூமியில் உரிமைகள் உள்ளன என்றும் அவற்றை அனைவரும் மதித்து வாழவேண்டும் என்று கற்பிக்கிறது இஸ்லாம்.

## 2.. ஒருவனே இறைவன்:

**சொல்வீராக: இறைவன் ஒருவனே, அவன் தேவைகள் அற்றவன் அவன் யாரையும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1-4)**

இறைவனின் தன்மைகளை இவ்வாறு புரிந்துகொண்டு இடைத்தரகர்களுக்கோ மூடநம்பிக்கைகளுக்கோ வீண் சடங்குசம்பிரதாயங்களுக்கோ இடம் கொடாமல் அவனை நேரடியாக வணங்க வேண்டும் என்று கற்பிக்கிறது இஸ்லாம்.

**(நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். (திருக்குர்ஆன் 2:186)**

படைத்தவனைத்தவிர மற்றவை அனைத்தும் படைப்பினங்களே. எனவே அந்த இறைவனுக்கு பதிலாக படைப்பினங்களை - அவை உயிருள்ளவை ஆயினும் சரி உயிரும் உணர்வுமற்ற உருவங்களாயினும் சரி - அவற்றை வணங்குவதோ அல்லது கடவுள் என்று கற்பிப்பதோ மோசடியும் பாவமும் ஆகும் என்கிறது இஸ்லாம். இச்செயல் இறைவனைச் சிறுமைப்படுத்துவதுடன் மனித மனங்களில் இறைவனைப்பற்றி அலட்சியப் போக்கை உண்டாக்கி விடுகிறது.

அதனால் மேற்கூறியவாறு நல்லொழுக்கத்தைப் பேணுவதற்கு மிகப்பெரும் தடையாகிறது. சமூகத்தில் பாவங்கள் பெருக காரணமாகிறது. மேலும் இவ்வாறு மனிதர்கள் வெவ்வேறு விதமாக கடவுளைக் கற்பனை செய்து வணங்க முற்படும்போது ஒரே மனித குலம் பிளவுபட்டு ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு மாய்வது, இடைத்தரகர்கள் இறைவனின் பெயரால் மக்களை ஏய்த்துப் பிழைப்பது என்பனவும் நிகழ்கின்றன. பல குழப்பங்களுக்கும் தீமைகளுக்கும் காரணமாகும் இப்பாவத்தை மட்டும் இறைவன் மன்னிப்பதே இல்லை என்கிறது திருக்குர்ஆன்.

## 3. இறைவனின் நீதிவிசாரணையும் மறுமை வாழ்வும்.

**ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார்.இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

அதாவது இவ்வுலகம் ஒருநாள் முழுமையாக அழிக்கப்பட்டு மீண்டும் இறைவனின் கட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் இறுதி விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். புண்ணியவான்களுக்கு அளவிலா இன்பங்கள் நிறைந்த சொர்க்கமும் பாவிகளுக்கு கடும் வேதனைகள் நிறைந்த நரகமும் நிரந்தர இருப்பிடங்களாக வழங்கப்படும்.

ஆக இந்த தற்காலிக வாழ்க்கை என்பது ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைக்கப்பட்டுள்ளது என்பதே இஸ்லாம் நினைவூட்டும் உண்மையாகும். இதை மறந்து வாழ்வதே மனித குலத்தின் அமைதியின்மைக்குக் காரணமாகும்.

## நடைமுறை வழிகாட்டுதல்

மேற்படி நம்பிக்கைகளை வெறும் போதனையோடு நிறுத்திவிடாது அவற்றில் மனிதன் வாழ்நாள் முழுக்க நிலைத்திருக்க அவனுக்கு தெளிவான ஒரு வாழ்க்கைத் திட்டத்தையும் வழிகாட்டுதலையும் தனது இறுதி வேதமாம் திருக்குர்ஆன் மூலமும் தனது இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முன்மாதிரி மூலமும் வழங்குகியுள்ளான் இறைவன். மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் வழிகாட்டுபவையாக அவை அமைந்துள்ளதை ஆராய்வோர் அறியலாம்.

இறைவன் கூறும் இந்த வாழ்க்கைத் திட்டத்தை ஏற்று வாழ்பவர்களுக்கே அரபு மொழியில் முஸ்லிம்கள் (பொருள்: கீழ்படிபவர்கள்) என்று வழங்கப்படுகிறது. அவ்வாறு வாழ முற்படுபவர்களுக்கு ஐவேளைத் தொழுகை, ஜகாத் எனும் கட்டாய தானம், நோன்பு, ஹஜ்ஜ் போன்றவைக் கடமையாக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் சமூக நல்லொழுக்கத்தை வலுப்படுத்துவதை நீங்கள் காணலாம்.

இவ்வாறு இஸ்லாம் கூறும் நம்பிக்கைகளோடு இணைந்த நடைமுறைக்கு மக்களை - குறிப்பாக குழந்தைகளைப் - பழக்கப் படுத்தினால் அவர்கள் பாவங்களில் இருந்து விலகி இருப்பார்கள். யாரும் காணாதபோதும் இறைவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வு அவர்களை பாவச் செயல்களில் இருந்து தடுக்கும்.

**உலக நடைமுறைகளை மாற்றிய திருக்குர்ஆன்**

# மக்களாட்சிக்கு வித்திட்ட மாமனிதர்!

ரமலான் மாதத்தில் இறங்கிய திருக்குர்ஆனும் அதை தன் முன்மாதிரி வாழ்க்கை மூலம் நடைமுறைப்படுத்திக் காட்டிய நபிகளாரும் இஸ்லாம் என்ற சுயசீர்திருத்த வாழ்வியல் மூலம் உலகின் அரசியல் நடைமுறைகளை தலைகீழாக மாற்றினர்!

- மன்னர்களும் மன்னர்களின் பரம்பரைகள் மட்டுமல்ல, திறமையுள்ள எந்தப் பாமரனும் ஆட்சிக் கட்டிலில் ஏறலாம் என்பதை உலகில் முதன்முதலாக விதியாக்கியதும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியதும் இஸ்லாம்தான்!
- நாடும் மக்களும் நாட்டு வளங்களும் அனைத்தும் மன்னனுக்கே சொந்தம் என்ற எழுதப்படாத விதியையும் 'மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி!' என்ற மரபுகளையும் மாற்றி அமைத்தது இஸ்லாத்தின் வரவு! நாடும் மக்களும் மட்டுமல்ல, உலகமும் அதிலுள்ளவை அனைத்தும் இறைவனுக்கே சொந்தம் என்றும் மனிதனிடம் தற்காலிகமாக வழங்கப்படுவதே ஆட்சியதிகாரம் என்று அரசியலுக்கு புது இலக்கணம் வகுத்தது இஸ்லாம்.
- **ஆட்சி பற்றிய பொறுப்புணர்வு**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நீங்கள் ஆட்சிப் பதவியை அடைய ஆசைப்படாதீர்கள். ஆனால் மறுமை நாளிலோ அதற்காக வருத்தப்படுவீர்கள்' (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி 7148)

நினைவில் கொள்க! நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளே உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பிலுள்ளவை பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளர் ஆவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். ஆண் தன் குடும்பத்தாருக்குப் பொறுப்பாளன் ஆவான். அவன் தன் பொறுப்புக்குட்பட்டவர்கள் குறித்து விசாரிக்கப்படுவான். பெண் தன் கணவனின் வீட்டாருக்கும், அவனுடைய குழந்தைகளுக்கும் பொறுப்பாளி ஆவாள். அவள் அவர்கள் குறித்து விசாரிக்கப்படுவாள். ஒருவருடைய பணியாள் தன் எசமானின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் அது குறித்து விசாரிக்கப்படுவான். நினைவில் கொள்க! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள்." (நபிமொழி நூல்: புகாரி 7138)

அரசனாயினும் ஆண்டியாயினும் அவரவர்க்கு இவ்வுலகில் இறைவனால் வழங்கப்பட்ட பொறுப்புகள் குறித்து மறுமையில் விசாரிக்கப்பட உள்ளார்கள் என்ற உண்மையை நினைவூட்டி அதை அரசியலுக்கு அடிப்படையாக்கியது இஸ்லாம்!

**நபிகளார் நிறுவிய சமத்துவ அரசாங்கம்**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆன்மீகத் தலைமையும் ஆட்சித் தலைமையும் அன்னாரது இறுதிக் காலத்தில் கைவந்தது. அன்று வரை

இருந்து வந்த அரசர்களின் அல்லது ஆட்சியாளர்களின் நடைமுறைகளை இஸ்லாமிய நடைமுறை மூலம் மாற்றிக் காண்பித்தார் நபிகளார்.

● பொதுவாக உலகில் முடியாட்சிகள் எப்படி இருக்குமோ அவ்வாறே அரபு நாட்டு அரசாங்கங்கள் செயற்பட்டுவந்தன. அரசாங்க அலங்காரங்களோடு உயர்ந்த அரண்மனை மாட மாளிகைகளில் சகல வசதிகளோடு தாங்கிய சௌந்தர்ய சிம்மாசனங்களில் பெருமைமிகு பட்டாடைகளை உடுத்திக் கொண்டு உடல் முழுக்க பொன் நகைகளைப் போர்த்திக் கொண்டு பொன்னாலும், வெள்ளியாலும் இழைக்கப்பட்ட இருக்கைகளில் சுற்றி நிற்கும் இளநங்கையர் வீசும் சாமரத்திலிருந்து வெளிப்படும் காற்றை அனுபவித்துக் கொண்டு உல்லாச வாழ்க்கையில் திளைத்துக் கொண்டிருந்த ஆட்சியாளர்கள், அரசவை பிரபுக்களுக்கு செலுத்தப்பட்டு வந்த மரியாதை இஸ்லாம் ஆட்சிக் கட்டில் ஏறியபின் தடுத்து நிறுத்தப் பட்டது.

● அரசவைக்கே அணிகலன்களாக திகழ்ந்த பொன் ஆசனங்களும், வெள்ளி இருக்கைகளும் இல்லாது போயின.

● ஆட்சியாளர்களின் வருகையை கட்டியம் கூறி அறிவிக்கும் நடைமுறையும் பராக், பராக் ஒலி ஓசைகளும் ஒழிந்து போயின.

● ஆட்சியாளரை சந்திக்க வந்துள்ளோரை வடிகட்டுவதற்காக நியமிக்கப் பட்டிருந்த தனி அதிகாரிகள் காணாமல் போயினர்.

● அரசன் விதிப்பதே சட்டம் என்ற நிலைமாறி இறைவன் விதிப்பதே சட்டம் என்ற நிலை அமுலுக்கு வந்தது.

● போரில் கிடைத்த வெற்றிப் பொருட்களில் மற்ற மக்களுக்கு இல்லாத வகையில் தலைவர்களுக்கென்று சிறப்புப்பங்கு இருந்தது. அவை அனைத்தையும் இல்லாதொழித்து ஐந்தில் ஒரு பங்கு என்ற நடைமுறையை இஸ்லாம் கடமையாக்கியது.

● பொது அவைகளில் தலைவர்களுக்கு முன்னால் வெளிப்படையாக மக்கள் பேசுவதற்குக்கூட சுதந்திரம் இல்லாமல் இருந்தது. ஆனால் இக்குறையைப் போக்க ஆட்சித் தலைவரும் அவருடைய அதிகாரிகளும் பொதுமக்கள் எளிதாகச் சந்தித்துக் கொள்ளும் பள்ளி வாசல்களையே தங்களுடைய செயலகங்களாக ஆக்கிக் கொண்டனர்.

அந்த காலகட்டத்தில் ஆட்சியாளர்களும், மன்னர்களும் அரசவையை சார்ந்தவர்களும் பொதுமக்களுக்கு மட்டுமல்ல எந்த சட்டத்திற்கும் எட்டாத தூரத்தில் இருந்தார்கள். சட்ட நெறிமுறைகள் அவர்களை ஒரு போதும் கட்டுப்படுத்தாது. ஆனால், இங்கு பார்த்தால் இறைத்தூதர் இடத்திலும் அவருடைய வீட்டார்களிடத்திலும் தான் முதன் முதலில் சட்டம் செயல்படத் தொடங்கும். இறைத்தூதரின் வீட்டைச் சார்ந்தவர்கள் ஏதேனும் ஒரு தவறை செய்து விட்டால் அவர்களுக்கு இரட்டிப்பு தண்டனை கிடைக்கும் என்று இறைவன் கட்டளையே பிறப்பித்திருந்தான்.

உலகெங்கும் வல்லரசுகள் கோலோச்சிக் கொண்டிருந்த வேளையில் பிற்காலத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்கள் தங்களால் இயன்றவரை அந்த அழகிய முன்மாதிரியையே பின்பற்றினர்.

# இந்திய மண்ணில் திருக்குர்ஆன் விதைத்த மாற்றங்கள்

வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு நம் நாட்டில் எவ்வாறு வந்தது என்பதை நாம் ஆராயும்போது பலரும் தங்கள் பங்களிப்பை ஆற்றியிருந்தாலும் நமக்கு கண்கூடாகத் தெரிவது திருமறைக் குர்ஆன்தான். நம்நாட்டு ஆன்மீக வாதிகளும் அரசியல்வாதிகளும் பெயரளவில் பிரச்சாரங்கள் மேற்கொண்டாலும் அவர்களிடம் ஒன்றே மனிதகுலம் என்பதில் ஒரு உறுதியான நிலைப்பாட்டைக் காணமுடிவதில்லை. ஆன்மீக மற்றும் அரசியல் சார்ந்த சுயநல சக்திகள் மக்களுக்குள் ஜாதி, மொழி, இனம், நாடு, ஊர் என்ற அடிப்படையில் பிரிவினைகளைத் தூண்டி அரசியல் ஆதாயங்கள் தேடவே முனைகின்றன. ஆனால் அவற்றைத் தடுக்கும் சக்தியாக திருக்குர்ஆன் நிற்பதைக் காணலாம்.

49:13. மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர்,உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில்,நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

இவ்வாறு மனிதகுல ஒற்றுமையைப் பறைசாற்றி நிற்கிறது குர்ஆன். இந்த மண்ணிற்கு வந்த எந்த வேதமும் கூறாத ஒன்று இது! முன்னாள் இறை வேதங்களை சுயநல சக்திகள் திரித்து மக்களை ஜாதி ஜாதியாகப் பிரித்துக் கூறுபோட்டு ஆதாயம் தேடிக்கொண்டு இருந்த வேளையில்தான் இந்த தூய இறைமறை இந்நாட்டு மக்களைக் காப்பாற்றும் அரணாக வந்து நின்றது.

## சகோதரத்துவமும் சமத்துவமும்

● திருக்குர்ஆனை ஏற்றுக்கொண்ட மக்களிடையே இனம், மொழி, நிறம், குலம், கோத்திரம் என்ற பிரிவினை உணர்வுகளை இது துடைத்தெறிகிறது. அனைவரும் ஒரு தாய் மக்களே என்ற சகோதர உணர்வை மேலோங்கச் செய்து மானிட சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் ஒருசேர நிலைநாட்டுகிறது இவ்வேதம். பள்ளிவாசல்களில் எந்தப் பாகுபாடுகளுக்கும் இடம் கொடாமல் தோளோடு தோள் சேர்ந்து வரிசைகளில் நின்று மக்கள் தொழுகை நடத்துவதைக் காணாதவர் இருக்க முடியாது.

## தீண்டாமை ஒழிப்பு

● ஜாதிகளை ஒழிக்கவும் தீண்டாமையை ஒழிக்கவும் பெரியார், அம்பத்கர் போன்ற பெரும் சீர்திருத்தவாதிகள் தங்கள் முழு வாழ்நாட்களையும் செலவிட்டதை இந்நாடு கண்டது.. ஆனால் அவர்களால் மக்களிடையே விழிப்புணர்வைத்தான் ஏற்படுத்த முடிந்ததே தவிர இத்தீமைகளை ஒழிக்க முடியவில்லை என்பதே உண்மை. ஆனால் திருக்குர்ஆன் தான் முன்வைக்கும் "மனிதர்கள் அனைவரும் சகோதரர்களே அவர்களைப் படைத்த இறைவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவன்" என்ற ஆணித்தரமான கொள்கையை ஏற்றுக்கொண்ட மாத்திரத்திலேயே அந்த

மனிதனை இத்தீமைகளிருந்து விடுவிக்கவும் பாதுகாக்கவும் செய்கிறது. அருளப்பட்ட நாள் முதல் உலகெங்கும் மனிதர்களிடையே நடத்திவரும் புரட்சியை அது இம்மண்ணிலும் நிகழ்த்தியது, தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அமேரிக்கா ஆப்ரிக்கா கண்டங்களில் வெள்ளையர்களையும் கறுப்பின மக்களையும் அவர்களிடையே தீண்டாமையை நீக்கி அவர்களை ஐவேளைத் தொழுகைகளில் அணிசேர வைக்கிறது, ஒரே தட்டில் இருந்து உணவைப் பகிர்ந்து உண்ணவும் வைக்கிறது இந்த இறைவனின் திருமறை! மேலும் வருடம் ஒருமுறை உலகின் மையப்பகுதியாம் மக்கா நகரில் ஹஜ்ஜின் போது மனிதகுலத்தின் அனைத்து இனத்தவரையும், நிறத்தவரையும், மொழியினரையும், தேசத்தவர்களையும் ஒரே சீருடையில் அணிவகுக்கச் செய்து அழகு பார்க்கிறது இந்த ஒப்பிலா அற்புதமாம் திருக்குர்ஆன்!

### மூடநம்பிக்கை மற்றும் சுரண்டல் ஒழிப்பு

● ஒன்றே குலம் ஒருவன் மட்டுமே இறைவன் என்ற கொள்கையோடு இறைவனை இடைத்தரகர்கள் இன்றியும் வீண் சடங்குசம்பிரதாயங்கள் இன்றியும் வணங்கக் கற்றுக் கொடுப்பதால் மூடநம்பிக்கைகளில் இருந்தும் கடவுளின் பெயரால் சுரண்டப்படுவதிலிருந்தும் மக்களைப் பாதுகாக்கிறது இந்த திருக்குர்ஆன்!

### சுயமரியாதை

● படைத்தவன் மீது அசைக்கமுடியாத நம்பிக்கையை மனித மனங்களில் ஆழமாக விதைப்பதால் அவர்களை ஒரே நேரத்தில் பயபக்தி உள்ளவர்களாகவும் அஞ்சா நெஞ்சர்களாகவும் சுயமரியாதை மிக்கவர்களாகவும் ஆக்குகிறது திருக்குர்ஆன்!

### பொறுப்புணர்வு

● சமூகத்தில் நன்மையை ஏவுவதும் தீமைகளைத் தடுப்பதும் இறைவழிபாட்டின் அம்சங்களாகக் கற்றுக் கொடுப்பதால் மக்களை சமூகப் பொறுப்புணர்வு உள்ளவர்களாகவும் கடமை உணர்வு உள்ளவர்களாகவும் வார்த்தெடுக்கிறது இந்த வான்மறை!

### உரிமை மீட்பு

● திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ளாத மக்களிடையேயும் தன் அழகிய தாக்கங்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதையும் நாம் காணலாம். உதாரணமாக நம் நாட்டில் மேல்தட்டு மக்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் உரிமைகளைப் பற்றி உணரவும் அரசு அவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தக்க இட ஒதுக்கீடுகளைத் தரவும் தூண்டுகோலாக அமைந்தது இந்தக் குர்ஆனின் தாக்கமே என்றால் மிகையாகாது.

இறைமறை வளர்த்திடும் இனிய பண்புகள் ஏராளம்! ஏராளம்! அவற்றை உரமூட்டி வளர்த்திட்டால், இறைவன் நாடினால் “யாதும் ஊரே! யாவரும் கேளிர்!” என்று முழங்கும் நாள் தூரத்தில் இல்லை!


## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

திருக்குர்ஆன் நற்செய்தி மலர் வெளியீடுகளை மொத்தமாக ஆர்டர் செய்யவும் விளம்பரத் தேவைக்காகவும் தொடர்பு கொள்ளுங்கள்:

ஜுல்பிகர் அலி: **8015714648 /9003555755**

# கல்லறைக்குப் பின்னுள்ள பயணம்!

நம் வாழ்க்கைப் பயணத்தின் அடுத்த கட்டங்களை ஆராய்ந்து உணரும் வண்ணம் அறிவுபூர்வமான வாதங்களை முன்வைக்கிறது திருக்குர்ஆன்.

**படைத்தவனை மறுக்க முடியுமா?**

- 56:57~59 நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா? (கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா? அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா?

**இக்குறுகிய வாழ்வு ஒரு பரீட்சையே!**

- 21:35 ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறத் பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர்,நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவீர்கள்.

**இவ்வுலகு அழியும் , மீணடும் உயிர்பெறும்!**

- 39:68 ஸூர் (எக்காளம்) ஊதப்படடால் உடன் வானங்களில் உள்ளவர்களும் பூமியில் உள்ளவர்களும் ~ அல்லாஹ் நாடியவர்களைத் தவிர ~ மூர்ச்சித்து விடுவார்கள்பிறகு அதில் மறு தடவை ஊதப்பட்டதும் உடன் அவர்கள் யாவரும் எழுந்து எதிர் நோக்கி நிற்பார்கள்.

**நேரம் குறிக்கப்பட்ட நாள் அது!**

அது என்று நிகழும் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் இறைவனிடம் அது நிச்சயிக்கப்பட்ட நாள்.

- 78:17 நிச்சயமாகத் தீர்ப்புக்குரிய நாள், நேரங்குறிக்கப்பட்டதாகவே இருக்கிறது. ஸூர் (எக்காளம்) ஊதப்படும் அந்நாளில் நீங்கள் அணிஅணியாக வருவீர்கள். இன்னும், வானம் திறக்கப்பட்டு பல வாசல்களாகிவிடும். மலைகள் பெயர்க்கப்பட்டு கானல் நீராகிவிடும்.

**இன்று நம் வினைகள் பதிவாகின்றன!**

- 36:12. நிச்சயமாக மரணமடைந்தவர்களை நாமே உயிர்ப்பிக்கிறோம் அன்றியும் (நன்மை, தீமைகளில்) அவர்கள் முற்படுத்தியதையும், அவர்கள் விட்டுச் சென்றவற்றையும் நாம் எழுதுகிறோம் எல்லாவற்றையும், நாம் ஒரு விளக்கமான ஏட்டில் பதிந்தே வைத்துள்ளோம்.

**நம் வினைகள் முழுமையாக விசாரிக்கப்படும்!**


- 99:6~8 .அந்நாளில், மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு, பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள். எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்.
- 36:65 .அந்த நாளில் நாம் அவர்களின் வாய்களின் மீது முத்திரையிட்டு விடுவோம்அன்றியும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தது பற்றி அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசம் அவர்களுடைய கால்களும் சாட்சி சொல்லும்.

**நல்லோர் சொர்க்கத்தில் நுழைவர்!**

- 4:57 (அவர்களில்) எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு, நன்மையான காரியங்களைச் செய்கின்றார்களோ அவர்களை சுவனபதிகளில் புகுத்துவோம், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பர் அங்கு அவர்களுக்குப் பரிசுத்தமான துணைவியர் உண்டு. அவர்களை அடர்ந்த நிழலிலும் நுழையச் செய்வோம்.

**தீயோர் நரகில் நுழைவர்!**

- 78:21~26 நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. வரம்பு மீறிவர்களுக்குத் தங்குமிடமாக. அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும்.



# பர்மிங்காமில் நபிகள் காலத்து குர்ஆன் பிரதி

**முஹம்மது நபி காலத்தில் கையால் எழுதப்பட்ட உலகின் பழம்பெரும் குர்ஆன் கிடைத்தது (தகவல்: BBC மற்றும் மாலைமலர்) லண்டன், ஜூலை 22-2015**

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஹம்மது நபி(ஸல்) காலத்தில் கையால் எழுதப்பட்ட உலகின் மிகப்பழைமையான குர்ஆனை இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காம் பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

“ரேடியோகார்பன்“ பரிசோதனைக்கு இந்த குர்ஆனை உட்படுத்திய ஆராய்ச்சியாளர்கள், இது கி.பி. 568 மற்றும் 645-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என 95.4 சதவீதம் அளவுக்கு துல்லியமாக கணித்துள்ளனர்.


எனினும், இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் முஹம்மது நபி(ஸல்) வாழ்ந்த சமகாலத்தில் கி.பி. 570 மற்றும் 632-க்கு இடைப்பட்ட காலத்தில் இந்த குர்ஆன் எழுதப்பட்டிருக்கலாம் என தெரியவந்துள்ளது.

ஆராய்ச்சிக் குழுவில் இடம் பெற்றிருந்த பேராசிரியர் டேவிட் தாமஸ், ”நிச்சயமாக இது முஹம்மது நபி வாழ்ந்த காலத்தில் அவர் சொல்லக் கேட்டு அவரின் தோழரால் எழுதப்பட்டிருக்கும்” என்று சொல்கிறார். “இதை எழுதியவர் முஹம்மது நபியவர்களை நேரடியாக சந்திதிருக்கவும் அவர் பிரச்சாரம் செய்வதை கண்டும் கேட்டும் இருக்கக் கூடும் என்கிறார் அவர்

இந்த குழுவிடம் கிடைத்துள்ள அந்த குரானின் இரண்டு பக்கங்களும் பண்டைக்காலத்தில் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட தோலின் மீது, அரபு மொழியின் முந்தைய வடிவமான “ஹிஜாஸி“ முறையில் மையினால் வசனங்களாக எழுதப்பட்டுள்ளது.

அந்த இரு பக்கங்களிலும் குர்ஆனின் 18 முதல் 20 வரையிலான சூறாக்களின் (அத்தியாயம்) வசனங்கள் இடம்பெற்றுள்ளன.





# நாங்களெல்லாம் முஸ்லிம்களே!


இஸ்லாம் என்றால் அதன் பொருள் கீழ்படிதல் என்பது. அதன் இன்னொரு பொருள் அமைதி என்பதாகும். அதாவது இறைவனுக்குக் கீழ்படிந்து வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கையிலும் அமைதி பெறலாம். மறுமையிலும் அமைதி அல்லது மோட்சம் பெறலாம் என்பது இந்த இறைமார்க்கம் முன்வைக்கும் தத்துவமாகும்.


முஸ்லிம் என்றால் கீழ்படிபவன் என்று பொருள். யார் இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவரகளே முஸ்லிம்கள் எனப்படுவர்..

முஸ்லிம் என்ற வார்த்தையை இவ்வாறும் நீங்கள் புரிந்துகொள்ள முடியும். நீங்கள் இயற்கையைப் பாருங்கள். மரம், செடி, கொடி , சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள், மீன்கள், பறவைகள், விலங்கினங்கள்........ என இவை அனைத்தும் இறைவனின் கட்டளைகளுக்கு - அதாவது இறைவன் விதித்த விதிகளுக்கு கட்டுப்பட்டே வாழ்கின்றன. எனவே இவை அனைத்தும் முஸ்லிம்களே! மட்டுமல்ல நம் உடலையே நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். நம் உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும்- இதயம், வயிறு, ஈரல்கள், நாடி, மூளை, சிறுநீரகம்.. என அனைத்தும் முஸ்லிம்களே! காரணம் அவை அனைத்தும் இறைவனுக்குக் கீழ்படிந்தவையாகவே இருக்கின்றன. அதாவது ஒரு மனிதன் இன்னும் முஸ்லிமாக ஆகாவிட்டாலும் அவனது உடல் என்றும் முஸ்லிமாகவே இருக்கிறது! .











**மாற்றுமத அன்பர்களுக்கு...**
**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற தொடர்பு கொள்ளுங்கள்:**

ஓசூர்: 9994713191 தர்மபுரி: 9842627171 கோவை: 9003555755 ஆனைமலை:8526257345 திருப்பூர் : 9150068919 குன்னூர்: 9843622246 திருச்சி: 9865446344 பெரம்பூர்:9043098885 மதுரை: 9789341714 சென்னை: 9944656942/9894442844 சேலம்: 9994091364 கும்பகோணம்: -9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 மயிலாடுதுறை: 9942941190 தென்காசி: 9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9944905212 உடுமலை: 9865051914 பழனி: 9791929377 ஊட்டி: 9543963412 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ஈரோடு: 7373947869 /9942958888 KGF: 9845217262 அருப்புக்கோட்டை:9043899409